**அ. கீழ்காணும் மரபுத்தொடருக்கு ஏற்ற பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. காது குத்துதல் : ______________________________

2. கையும் களவுமாய் : ______________________________

3. கை கொடுத்தல் : ______________________________

குற்றம் அல்லது தவறு இழைக்கும் தருணத்திலேயே

தக்க நேரத்தில் உதவி செய்தல்.

சாமர்த்தியமாக ஏமாற்றுதல்.

**ஆ. காலியான இடங்களுக்குப் பொருத்தமான மரபுத்தொடர்களை எழுதுக.**

நகுலன் நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவன். அவன் ஆறாம் ஆண்டில் பயில்கிறான். வகுப்பில் கெட்டிக்கார மாணவர்களில் இவனும் ஒருவன்.. நகுலன் பிறருடன் அதிகமாகப் பேச மாட்டான். தன்னுடைய திறமைகளைத் தன் நண்பர்களுக்குத் தெரியாமலே வைத்திருந்தான். அவனைப் பற்றி முழுமையாக அறியாத பல வேளைகளில் நகுலனை அவன் நண்பர்கள் கிள்ளுக் கீரையாக எண்ணினர்.

ஒரு நாள் பள்ளி முடிந்து வீடு திரும்பினான் நகுலன். அப்பொழுது தன் நண்பர்களைத் திருடர்கள் மடக்கி பிடித்திருந்ததைக் கண்டான். நகுலனைக் கண்ட ஒருவன் அவனையும் விரட்டிப் பிடித்தான். சில நிமிடங்களில் நகுலன் திருடனுக்கு ______________________ விட்டு அவன் பிடியிலிருந்து தப்பினான்.

நகுலன் மறைந்திருந்து தன் இரு நண்பர்களையும் காப்பாற்ற எண்ணினான். கண் சிமிட்டும் நேரத்தில் தனக்குத் தெரிந்த தற்காப்புக் கலையைக் கொண்டு அவர்களைக் காப்பாற்றினான். தங்களுக்குத் தக்க சமயத்தில் ______________________ உதவிய நகுலனை நண்பர்கள் பாராட்டினர். இவர்களின் சத்தம் கேட்டு அவ்வழியே வந்த வழிப்போக்கர்கள், திருடர்களைக் ______________________ பிடித்தனர்.

கையும் களவுமாகப்

காது குத்திவிட்டு

கைக்கொடுத்து

LIVEWORKSHEETS